# கோறளைப்பற்று பிரதேச சபை

## 60வது சபை அமர்வு (09.02.2023)

## கூட்டறிக்கை

**காலம்:** **09**.02.2023 – வியாழக் கிழமை, காலை 9.00 மணி

**இடம்:** கோறளைப்பற்று பிரதேச சபையின், சபா மண்டபம்.

**தலைமை:** கௌரவ. தவிசாளர் கனகரெட்ணம் கமலநேசன்

கோறளைப்பற்று பிரதேச சபையின் 60ஆவது சபை அமர்வு, **09**.02.2023 வியாழக்கிழமை அன்று காலை 9.00 மணிக்கு கோறளைப்பற்று பிரதேச சபையின் சபா மண்டபத்தில் இடம்பெற்றது. இவ் அமர்வில் கலந்து கொண்ட கௌரவ உறுப்பினர்களின் விபரங்கள்.

| | |
|---|---|
| 01. திரு. கனகரெட்ணம் கமலநேசன் | ~ கௌரவ தவிசாளர் |
| 02. திரு. தர்மலிங்கம் யசோதரன் | ~ கௌரவ உப தவிசாளர |
| 03. திருமதி. ஸோபா ஜெயரஞ்சித் | ~ கௌரவ உறுப்பினர் |
| 04. ஜனாப். முகம்மது புகாரி முகம்மது வாசுதீன் | ~ கௌரவ உறுப்பினர் |
| 05. திரு. சிற்றம்பலம் கிருபாகரன் | ~ கௌரவ உறுப்பினர் |
| 06. திரு. காளிக்குட்டி நடராசா | ~ கௌரவ உறுப்பினர் |
| 07. ஜனாப். சேகு இஸ்மாயில் முகம்மது இம்தியாஸ் | ~ கௌரவ உறுப்பினர் |
| 08. ஜனாப். முகம்மட் புகாரி முகம்மட் தையிப் | ~ கௌரவ உறுப்பினர் |
| 09. திரு. பொன்னையா புஸ்பேந்திரன் | ~ கௌரவ உறுப்பினர் |
| 10. திரு. சீனித்தம்பி தர்மலிங்கம் | ~ கௌரவ உறுப்பினர |
| 11. ஜனாப். ஆதம்லெப்பை அப்துல் கபூர் | ~ கௌரவ உறுப்பினர் |
| 12. திரு. குணராசா குணசேகரன் | ~ கௌரவ உறுப்பினர் |
| 13. திரு.கந்தசாமி பகீரதன் | ~ கௌரவ உறுப்பினர் |
| 14. திரு.கிருஷ்ணபிள்ளை சேயோன் | ~ கௌரவ உறுப்பினர் |
| 15. திரு. சாமித்தம்பி மணிசேகர் | ~ கௌரவ உறுப்பினர் |
| 16. திருமதி. கந்தசாமி றஞ்சிதமலர் | ~ கௌரவ உறுப்பினர் |
| 17. திருமதி. பஞ்சாட்சரம் லெட்சுமி | ~ கௌரவ உறுப்பினர் |
| 18. திருமதி. பொன்னையா கலைவாணி | ~ கௌரவ உறுப்பினர |
| 19. ஜனாபா. மஹ்முதுலெவ்வை நபீரா | ~ கௌரவ உறுப்பினர் |
| 20. திரு. சுந்தரம் சுதர்சன் | ~ கௌரவ உறுப்பினர் |
| 21. ஜனாப். காமீது லெவ்வை இப்றாஹீம் | ~ கௌரவ உறுப்பினர் |
| 22. திரு. சண்முகம் கதிரவன் | ~ கௌரவ உறுப்பினர் |

60ஆவது சபை அமர்வானது கௌரவ தவிசாளர் கனகரெட்ணம் கமலநேசன அவர்களின் தலைமையில் காலை 9.00 மணியளவில் ஒரு நிமிட இறைவணக்கத்துடன், ஆரம்பமானது

அதனைத்தொடர்ந்து 60 ஆவது சபை அமர்விற்கு வருகை தந்த , கௌரவ உப தவிசாளார், கௌரவ உறுப்பினர்கள், மற்றும் செயலாளர், உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு கௌரவ தவிசாளர் அவர்களினால் தலைமையுரை நிகழ்த்தப்பட்டது .

கோறளைப்பற்று பிரதேச சபையின் இடைக்கால தவிசாளரின் தலைமையிலான இரண்டாவது கூட்டத்தினை இன்று தொடங்கியிருப்பதாகவும் ,கோறளைப்பற்று பிரதேச சபையின் 24.01.2023 ஆந் திகதி தொடக்கம் 09.02.2023 திகதி வரையிலான செயற்பாடுகளை தன்னால் முடிந்தளவு செயற்படுத்திக் கொண்டு இருப்பதாகவும், அத்துடன் சில குறைபாடுகள் இனங்காணப்பட்டிருப்பதாகவும் இக் குறைபாடுகள் நிர்வாகத்தினை சரியான முறையில் இயங்க விடாத காரணத்தினால்தான் முறறைகேடுகள் நடைபெற்றிருப்பது தெட்டத்தெளிவாக விளங்குவதாகவும்தெரிவித்ததுடன், அந்தவகையில் நிர்வாகத்தினை செண்மையாக்கும் செயற்பாடுகளை பிரதேச சபையின் செயலாளர் முன்னெடுத்துவருவதாகவும் அதற்கு எங்களாலான பூரண ஒத்துழைப்பினை ' வழங்கிக்கொண்டு இருப்பதாகவும் . இனிவரும் காலங்களில் நிர்வாகச் சீர்கேடுகள் சரிப்படுத்தப்படும் என நினைப்பதாகவும் , அந்தவகையில் செயலாளர் சில செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதனை காணக் கூடியதாக இருப்பதாகவும் , அதற்கான அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டு இருப்பதாகவும் சுட்டிக்காட்டியதுடன்

நிர்வாகத்தில் சில உத்தியோகத்தர்களின் அசமந்தபோக்குகளும் உள்ளதனை காணக் கூடியதாக இருப்பதாகவும் , சரிவர கடமைகளை நிறைவேற்றாத உத்தியோகத்தரகளுக்கு இடைக்கால தண்டனைகள் வழங்கப்பட்டு இருப்பதாகவும் , இவ்வாறு நிர்வாக சீர்கேடுகளை நிவர்தி செய்யும் பொழுதுதான் மக்களுடைய பிரச்சினையினை இலகுவாகதீர்த்துக் கொள்ள முடியும் எனவும் அவ்வாறன செயற்பாடுகளை இனிவரும் தவிசாளர்கள் செயற்படுத்துவார்கள் என்பதுடன் இனிவரும் காலங்களில் சபையினை உன்னதமாக செயற்படுத்த முடியும் எனவும் சபையின் செயற்பாடுகளுக்கு சிலா் இடையூறு ஏற்படுத்துவதனை கண் கூடாக காணக் கூடியதாக உள்ளதாகவும் .

நாங்கள் எடுக்கின்ற எத் தீர்மானங்களுயும் பிறருடைய நலம் சார்ந்து எடுக்கப்படுவதாகவும் தீர்மானங்களுக்கு முட்டுக்கட்டை போடுவது அவர்களது வளர்ச்சிக்கும் பிறருடைய வழற்சிக்கும் தடையாக அமையும் எனவும் .

விசேட கூட்டம் ஒன்று எற்பாடு செய்யப்பட்டதாகவும் இவ் விசேட கூட்டத்தில் சில விடயங்களை நிறைவேற்றுவதற்காக கொண்டுவந்தாகவும் ஆனால் மேலதிகாரிகளுடைய தடை உத்தரவுகள் தொலைபேசி வாயிலாக காதுக்கு எட்டியதாகவும் இருந்தும் அதற்கான காரணத்தினை உள்ளூராட்சி ஆணையாளரிடம் கடிதம் மூலம் கேட்டிருப்பதாகவும் இதுவரை எவ்விதமான பதில்களும் வழங்கப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டினார்

அந்தவகையில் கடந்த செவ்வாய்கிழமை செயலாளரையும் அழைத்துக்கொண்டு உள்ளூராட்சி ஆணையாளரிடம் நேரடியாகச் சென்று ஆலோசனைகளைத் கேட்டு அறிந்து கொண்டாதாகவும் தனிநபர் விருப்பு வெறுப்புக்கு அப்பால் இவ்வாறான மக்கள் நலம் சார்ந்த விடயங்களை எதிர்காலத்தில் எதிர்பதனை நிறுத்திக்கொள்ள வேண்டும் என கேட்டுக்கொண்டதுடன்,

சில அலுவலகம் சார்ந்த விடயங்கள் மற்றும் வாகனங்கள் திருத்தம் தொடர்பாக வழங்கப்பட்ட அனுமதிகள் தொடர்பாகவும் கௌரவ உறுப்பினர்களுக்கு தவிசாளர் அவர்களினால் தெளிவுபடுத்தப்பட்டது

அத்துடன் பிரதேச சபையில் எந்த தலைப்புக்கு கீழ் என்ன வருமானங்கள் ஈட்டப்படுகின்றது என்பதனை கௌரவ உறுப்பினர்கள் தெரிந்து கொள்ளவேண்டும் என கூறியதுடன் அவ் தலைப்பின் கீழ்

பெற்றுக்கொண்ட வருமான விபரத்தினையும் கௌரவ உறுப்பினர்களுக்கு கௌரவ தவிசாளர் அவர்கள் தெரியப்படுத்தினா,ர் அத்துடன் 07.02.2023 வரையான காலப்பகுதியில் 71,21,398.74 ரூபாய் வருமானம் மேற்படி தலைப்பின் கீழ் ஈட்டப்பட்டிருப்பதாகவுத் கௌரவ உறுப்பினர்களுக்கு தெளிவு படுத்தினார் .

அத்துடன் கௌரவ தசாளரினால் சபைக்காக மேற்கொள்ளப்பட்ட செலவீனங்களுக்காக வழங்கப்பட்ட அனுமதி தொடர்பான விபரங்களையும் தெளிவு படுத்தினார்.

மேலும் வருமான விபரங்களை நிதி உதவியபாளரிடமும் கேட்டு கௌரவ உறுப்பினர்கள் பெற்றுக்ககொள்ள முடியும் எனவும் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் பிரதேச சபையின் சேவைகளுக்காக வங்கி மூலம் பொது மக்கள் பணம் செலுத்துவதற்கான முறையினை செயலாளர் அவர்கள் ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் செய்து வருவதாகவும் இதனால் தவறுகளை நிவர்த்தி செய்யலாம் என சுட்டிக்காட்டினார்.

அத்தோடு திகிலிவெட்டை, சந்தி வெளி மக்களின் போக்குவரத்துக்காக பயன்படுத்தும் பாதை தொடர்பாக பொறியியலாளரிடம் கலந்துரையாடிய போது நேரடியாக வந்து பார்வையிடுவதாகவும் புதிய பாதையினை அமைப்பதற்குரிய மதீப்பீட்டு அறிக்கையினை தருவதாகவும் குறிப்பிட்டிருந்தார் என தெரியப்படுத்தியதுடன்,

திருகோணமலை நகர சபையில் பயன்படுத்தப்பட்ட உழவு இயந்திரம் இரண்டு காணப்படுவதாகவும் அதனை கௌ்வனவு செய்வதற்காக கேட்டபோது அதன் செயலாளர் ஆணையாளர் அவர்களிடம் கலந்துரையாடி அதனை பெற்றுத் தருவதாக கூறியிருப்பதாகவும், இவ்வாறு பெற்றுக் கொள்ளும் சந்தர்பத்தில் கிரான் கோரகல்லிமடு சந்திவெளி பகுதியில் திண்மக்கழிவு அகற்றுவதற்காக அதனை வழங்க முடியும் என குறிப்பிட்டிருந்தார் .

சபையில் சிறு பிழையுடன் காணப்படும் உழவு இயந்திரம் ஒன்று இருப்பதாக தொழில் நுட்ப உத்தியோகத்தர் குறிப்பிட்டிருப்பதாகவும் அதனை திருத்தி கிரான் கோரகல்லிமடு சந்திவெளி பிரதேசத்தில் திண்மக்கழிவு அகற்ற பயன்படுத்துமாறு செயலாளரிம் கூறியிருப்பதாக தெரிவித்தார்.

பல பொது இடங்கள் மற்றும் வீதிகளில் மின் விளக்கு இல்லால் இருப்பதாகவும் தற்பொழுது சபையில் எந்த வொரு மின்குமிழ்களும் கையிருப்பில் இல்லை எனவும் அத்துடன் தேர்தல் காலம் என்பதனால் அதனை கொள்வனவு செய்ய முடியாமல் உள்ளது எனவும் பொதுமக்கள் மின்கம்ப இலக்கத்தினை குறிப்பிட்டு இதற்கான மின் குமிழினை பொருத்தித்தர கோரினால் அதனை சபை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும் என சுட்டிக்காட்டியதுடன்,

கும்புறுமூலை இராணுவத்தினர் அதன் சந்தியில் மின்குமிழ் பொருத்தித்தருமாறு கோரியிருப்பதாகவும் அத்துடன் கோரவெளி குடிநீர் வழங்கும் அலுவலகத்திலும் மின்குமிழ் இல்லை எனவும் அத்துடன ்எமது அலுவல பின்பகுதியிலும் மின்குமிழ் இல்லை எனவும் இது தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளரிடம் கூறியபோது அதனை செய்து கொடுக்கும் படி கூறியதாகவும் கூடுதலாக எதனையும் கொள்வனவு செய்ய வேண்டாம் எனவும் குறிப்பிட்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டினார் .

கல்குடா புகையிரதக் கடவை மற்றும் கொண்மடயன்கேணி ஆலயத்திபகுதிற்கான மின்குமிழினை தனது சொந்த நிதியிலிருந்து பெற்றுக்கொடுத்ததாக கூறிக்கொண்டு தனது தலமையுரையினை நிறைவு செய்தார் .

**அதனைத்தொடர்ந்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர் ஜனாப். காமீது லெவ்வை இப்றாஹீம் அவர்கள்** கௌரவ தவிசாளர் அவர்களின் தலமையுரையில் தேர்தல் காலங்களில் சபையினால் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் முன்னெடுக்க முடியாது என உள்ளூராட்சி ஆணையாளர் குறிப்பிட்டதாக கூறியிருந்தார் ஆனால் உள்ளூராட்சி ஆணையாளர் தேர்தல் காலங்களில் சபையினால் எந்தவொரு வேலைத்திட்டங்களை செய்யக் கூடாது என எழுத்து மூலம் வழங்கியிருக்கவேண்டும் எனவும் . 01.02.2023 ஆந் திகதி சபையினால் மின்குமிழ் பொருத்தப்பட்டுள்ளதாகவும் என தனது கருத்தினை பதிவு செய்தார்

**அதனைத்தொடர்ந்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர் திரு. குணராசா குணசேகரன்** எனது வட்டாரத்தில் அதிகமான மணல் ஒழுங்கை காணப்படுவதாகவும் அதனால் மக்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர் எனவும் ,அத்துடன் வீதி மின் குமிழ்கள் பொருத்தப்படாமல் இருள் சூழ்ந்த பிரதேச மாகவும் காணப்படுவதாகவும் இது தொடர்பாக பிரேரணை ஒன்றினை தான் வழங்கியிருந்ததாகவும்,

தேர்தல் காலங்களில் அபிவிருத்தி தொடர்பான விடயங்கள் செய்ய முடியாது என்பதனை உள்ளூராட்சி ஆணையாளர் கூறியதாக தாங்கள் தெரிவித்திருந்தீர்கள் ஏனைய சபைகளில் அபிவிருத்தி வேலைத்திட்டம் நடைபெறுவதாகவும் , ஊழியர்களின் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு முயற்சி எடுத்தால் அதனை இங்குள்ள உறுப்பினர்களா ? அல்லது எமக்கு அப்பால் இருக்கின்ற கட்சிகளா தடுக்கின்றது என்பது எனக்கு தெரியவில்லை என குறிப்பிட்டதுடன், இது ஒரு மோசமான சிந்தனை எனவும் எமது சபையில் கடமை புரியும் உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவு மற்றும் நஷ்டஈட்டினை வழங்குவதற்கு சபையால் முன்னெடுத்து செல்ல முடியவில்லை என்றால் எவ்வாறு கோறளைப்பற்று பிரதேச சபை பிரதேச மக்களின் நலனை எவ்வாறு கொண்டு செல்ல முடியும் என கேள்வி எழுப்பியதுடன் .

அதனை நிவர்த்தி செய்யும் நோக்கத்துடன் புதிதாக பொறுப்பேற்றுள்ள கௌரவ தவிசாளர் அவர்களுக்கு அதற்கான சரியான ஆவணங்களை அவர்கள் தராவிட்டால் உள்ளூராட்சி சட்டத்தினை பயன்படுத்தி செயற்பாட்டினை முன்னெடுக்கலாம் எனவும் எமது பிரேதேச நலனை முடக்கி எமது சபையின் வருமானத்தினை சுவிகரித்த கட்சிகள் அதனை செய்வதாக தனக்கு சந்தேகம் எழுவதாகவும் வெளிப்படை தன்மையுடன் சபையின் வருமானங்களையும் செலவுகளையும் தெரியப்படுத்திய கௌரவ தவிசாளருக்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்வதாகவும் சபையில் நடந்த அநீதிகளை ஊடக சந்திப்பின் ஊடாக கௌரவ தவிசாளர் அவர்கள் வெளிப்படுத்த வேண்டும் என கேட்டுக் கொண்டு தனது உரையினை நிறைவு செய்தார் .

அதற்கு பதிலளித்த கௌரவ தவிசாளர் அவர்கள் கிண்ணியடி கொண்டயன்கேணி சுங்கானகேணி கிரான் முறக்கொட்டாஞ்சேனை சந்திவெளி ஆகிய சில பகுதிகள் இருளில் மூழ்கியிருப்பதனை கண் ஊடாக பார்க்க கூடியாதாகவுள்ளது இனிவரும் காலங்களில் நலத்திட்டங்கள் சமமாக பேணப்பட வேண்டும் என்பதுடன் திகிலிவெட்டை குடும்பிமலை பகுதிகளில் மக்கள் யானை மற்றும் பாம்புகளின் நடமாட்டம் அதிகமாகக்காணப்படுப் பிரதேசம் எனபதனால் அவ்வாறான பகுதிகளில் மின் விளக்குகளைப் பொருத்திக் கொடுக்கவேண்டும் எனவும் .

தான் யாருக்கும் பாதகமாக இருக்கமாட்டேன் எனவும் .தற்பொழுதுள்ள காலகட்டத்தில் தேர்தல் சட்டம் நடமுறையிலுள்ளதால் எதனையும் செய்ய முடியாத நிலமை காணப்படுகின்றது கடந்த மாதம் எனக்கு வழங்கப்பட்ட சபைக் கொடுப்பனவை கிரான் பிரதேசத்தை சேர்ந்த நூலகத்திற்கு, 25,000.00 ரூபாயுடன் மேலதிகமாக 20,000.00 ரூபாய் சேர்த்து புத்தக அலுமாரி ஒன்றினை அன்பளிப்புச் செய்ததாக தெரிவித்ததுடன் , என்னால் முடிந்தளவு தன்னை அர்பணித்துள்ளதாகவும் செயலாளர் அவர்களும் அவரை அர்பணித்து வேலைகளை செய்வதாகவும் தெரிவித்ததுடன் எதிர்காலத்தில் தவிசாளராக வருபவர்கள் செயலாளருடன் இணைந்து செயற்படுவார்களனால் சபையினை உரிய இடத்திற்கு கொண்டு செல்லாலாம் என தனது கருத்தினைப் பதிவு செய்தார்.

அதனைத் தொடர்ந்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர் திரு. சீனித்தம்பி தர்மலிங்கம் அவர்கள் விசேட சபை அமர்வில் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்ததாகவும் அவ் விசேட அமர்வுக்கான நிகழ்ச்சி நிரலில் முக்கியமான தீர்மானங்கள் குறிப்பிடப்பட்டிருந்ததாகவும் ஆனால் இதனை நிறுத்துமாறு தொலைபேசி வாயிலாகத்தான் அறிவித்திருப்பதாக தெரிவித்திருக்கின்றீர்கள், ஏன் அவர்கள் எழுத்து மூலம் அறிவிக்க வில்லை? என கோள்வி எழுப்பியதுடன், அதனை வன்மையாகக் கண்டிப்பதாகவும் சபையினுடைய வாகனங்கள் வாகனத்திருத்துமிடத்தில் தரித்துஇருப்பதாகவும் அதனை திருத்துமாறும் கேட்டுக் கொண்டதுடன் மைதானத்திற்கு பெயர் சூட்டும்விடயம் மற்றும் கடந்த காலத்தில் மின்குமிழ்கள் வழங்கி பொருத்தப்பட்ட விடயங்கள் தொடர்பாகவும் தனது அதிர்ப்தியினை வெளியட்டார் .

அதற்கு பதிலளித்த கௌரவ தவிசாளர் அவர்கள் மின்குமிழ் தான் தவிசாளராக பொறுப்பேற்க முன்னேர மின்குழிழ்கள் வழங்கப்பட்டதாகவும் தான் தரிசாளராக வரும் பொழுது இங்கு எவ்வித மின்குமிழ்களும் இருக்க வில்லை எனவும் ,விசேட கூட்டம் இரத்துச் செய்டயப்பட்டமைக்கான காரணத்தினை எழுத்து மூலம் கேட்டிருப்பதாகவும் பதிலளித்தார் .

அதனைத் தொடர்ந்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர் திருமதி. பஞ்சாட்சரம் லெட்சுமி அவர்கள் கடந்த 5 வருடங்களாக தனது வட்டாத்திற்குட்பட்ட கோயிகளின் வீதிகளுக்கு மின்குமிழ்கள் கேட்டிருந்தும் வழங்கப்படவில்லை எனவும் 5 வருடங்களில் 25 மின்குமிழகள் மாத்திரமே தனக்கு வழங்கப்பட்தாகவும் வீதிகளை புனரமைத்து கொடுக்கும்படி கேட்டும் அதுவும் நடைபெறவில்லை எனவும் ஆதரித்தவர்களுக்கு மாத்திரமே அனைத்தும் வழங்கப்படதாகவும் தற்பொழுதுள்ள கௌரவ தவிசாளர் அவர்கள் தான் கேட்டுக் கொண்டதற்கு அமைவாக அவரின் சொந்த நிதியில் மின்குழிகள் வழங்கியதாகவும் அதற்கு ஒத்துழைப்பினை செயலாளர் அவர்களும் வழங்கியிருந்ததாகவும் தனது கருத்தினைப் பதிவு செய்தார் .

**அதனைத் தொடர்ந்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர் திரு.கந்தசாமி பகீரதன் அவர்கள்** கடந்த காலங்களில் தன்னால் முன்னிலைப்படுத்தப்பட் கிறவல் வீதிகள் ஒன்றேனும் போடப்படவில்லை எனவும் தவிசாளருடைய கதிரை பாதுகாக்கபடவேண்டும் என்பதற்காக தன்னுடைய பிரதேசம் புறக்கணிக்கப்பட்டிருந்தது எனவும் ஒரு வட்டாரத்திற்கு இரண்டு கோடி ரூபாய் செலுத்தபடுமாக இருந்தால் எனது வட்டாரத்திற்கு 50,0000.00 ரூபாய் செலுத்தபட்டிந்தால் பெரும்பான்மையான மக்களது போக்குவரத்தினை சீர் செய்திருக்கலாம் எனவும் புதிய தவிசாளர் அவர்களுக்குச் சந்தர்பம் கிடைத்திருந்தால் சமமாக நடத்தியிருப்பார் எனவும் அவருக்கான சந்தர்பம் சரியாக இன்னும் கிடைக்கவில்லை எனவும்,

தன்னால் கடந்தகாலங்களில் நலகங்களுக்கு தேவையான புத்தகங்களை அடையாளப்படுத்தி வழங்கியிருந்தும் அவை பெற்றுக்கொடுக்கப் பட்டுள்ளனவா? என தெரியவில்லை என்றும் பதவியேற்ற மறுகணமே கிரான் பொது நூலகத்திற்கு புத்தகங்களை பாதுகாப்பதற்காக அலுமாரி ஒன்றினை வழங்கியிருந்த புதிய தவிசாளர் அவர்களுக்கு கிராம மக்கள் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதாகவும்

பழுதடைந்த வாகனங்களை சரியான முறையில் திருத்தியிருந்தால் கூடியளவான சேவையினை பெற்றிருக்கமுடியும் எனவும் சபையிலுள்ள மகேந்திரா வாகனம் திருத்தப்படிருந்தால் பிரேதங்களை கொண்டு செல்வதற்கான வழிமுறைகளை ஏற்படுத்தியிருக்கலாம் எனவும் தனிப்பட்டமுறையில் எங்களை வளர்த்துக்கொள்வதற்காக ஒருபோதும் நாம் முன்னிக்கக் கூடாது எனவும் ஒட்டுமொத்த சமூகத்தின் வளர்ச்சிற்காக எமது சேவைகள் அமையவேண்டும் என்று தனது கருத்தினைப் பதிவு செய்தார்.

**அதனைத் தொடர்ந்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர் ஜனாபா. மஹ்மூதுலெவ்வை நபீரா அவர்கள்** கௌரவ புதிய தவிசாளர் அவர்கள் கிறவலினை பெற்றுத்தர முன்வந்தும் அதனை பெற்றுக்கொள்ளமுடியாமல் எமது சபையினால் போனதனையிட்டு கவலை கொள்வதாகவும் ஊழியர்களுக்கான கொடுப்பனவுகளை கண்டிப்பாக வழங்கவேண்டும் எனவும் இது அரசியலுக்கு அப்பாற் பட்ட விடயம் எனவும் ஊழியர்களின் சம்பள விடயத்தில் புரண ஆதரவினை தான் வழங்குவதாக

தெரிவித்துக் கொண்டு காலை 10.30மணியளவில் கௌரவ தவிசாளரின் அனுமதியிடுன் சபை நடவடிக்கையிலிருந்த வெளியேறினார்.

**அதற்கு பதிலளித்த கௌரவ தவிசாளர் அவர்கள்** எமது செயலாளர் அவர்கள் கிரான் தெற்கு பிரதேச செயலகத்தினூடாக கிறவலினை பெற்றுக் கொள்வதற்கான முயற்சியினை மேற்கொண்டுள்ளதாகவும் இது தொடர்பாக பிரதேச செயலாளரிடம் தானும் செயலாளரும் சென்று கலந்துரையாடிய போது அதற்கான அனுமதியினை தந்துள்ளதாகவும் . சபை இல்லாவிட்டாலும் அதற்கான முன்னெடுப்பினை முன்னெடுப்பார் எனற நம்பிக்கை தனக்குள்ளதாக தனது கருத்தினை பதிவு செய்ததுடன் கடந்த கிழமை சபையின் வாகனத்தினை தான் பயன்படுத்திய விபரங்களை கௌரவ உறுப்பினர்களுக்கு தெளிவு படுத்தினார்.

**அதனைத் தொடர்ந்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர் ஜனாப். முகம்மட் புகாரி முகம்மட் தையிப்** அவர்கள் இன்றுடன் அரசியலில் பத்தாவது வருடங்களை பூர்த்திசெய்யும் கௌரவ உறுப்பிகளான திரு. காளிக்குட்டி நடராசா, ஜனாப். முகம்மது புகாரி முகம்மது வாசுதீன் அவர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதாகவும் அத்துடன் தனது கடந்த கால அனுபவங்களை கௌரவ உறுப்பினர்களோடு பகீர்ந்து கொண்டார்.

**அதனைத் தொடர்ந்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர்** ஜனாப். ஆதம்லெப்பை அப்துல் கபூர் அவர்கள் கோறளைப்பற்று பிரதேச சபையில் சவாலான மற்றும் அதிக விமர்சங்களை பெற்ற உறுப்பினராக தான் இருப்பதாகவும் அப்பிரதேச சபைக்கு வந்ததிலிருந்து 3.5 கோடிக்கு மேற்பட்ட வேலைகளை தான் செய்திருப்பதாகவும் அது சிலருக்கு காழ்புணற்சியாகவும் இருக்கலாம் எனவும் . அத்துடன் தனது வட்டாரத்தில் தன்னால் முன்னின்று கொண்டுவரப்பட்டு செய்யப்பட்ட வேலைகளையும் பட்டியலிட்டு சுட்டிக்காட்டினார் . பிரேதங்களை ஏற்றுவதற்கதாக சபையில் உள்ள வாகனத்தினை திருத்தி பயன்படுத்துமாறு கௌரவ உறுப்பினர் பகீரதன் அவர்களைப்போன்று பலதடவை தான்னால் சுட்டிக்காட்டப்பட்டதாகவும் தெரிவித்ததுடன் எமது சபைக்கு வருமானத்தினை ஈட்டித்தருவதற்கான செயற்பாட்டினை முன்னனெடுத்ததில் தானும் ஒருவான் என்பதனை தெரிவித்துக்கொள்வதில் பெருமையடைவதாகவும் சுட்டிக்காட்டினார்.

**அதனைத் தொடர்ந்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர்** ஜனாப். முகம்மது புகாரி முகம்மது வாசுதீன் அவர்கள் கௌரவ உறுப்பினர் 3 கோடிருபாய் பெறுமதியான வேலைத்திட்டத்தினை முன்னெடுத்ததாக குறிப்பிட்டிருந்தார் அவ் வேலைத்திட்ததினை எமது பிரதேசத்திற்கு கொண்டுவருவதற்கு பாடுபட்டவர்களில் நானும் ஒருவர் எனவும் எமது சபையினால் 2 கோடிருபாய் நிதி ஒதுக்கப்பட்டிருந்தும் அவ் வேலைகள் நேர்மையாக நடைபெற்றிருக்கவில்லை எனவும் கடந்த காலத்தில் நடைபெற்ற ஊழல் மற்றும் தனக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்பாக கௌரவ உறுப்பினர்பினர்களுக்கு தெளிவு படுத்தினார் .

**அதனைத் தொடர்ந்து உரையாற்றிய கௌரவ உப தவிசாளர் திரு. தர்மலிங்கம் யசோதரன் அவர்கள்** 2018 தொடக்கம் இன்றுவரை 22 பிரேரணைகளை கொண்டு வந்து வாசித்திருந்ததாகவும் அதில் ஒரு பிரேரணை கூட நிறைவேற்றப்படவில்லை எனவும் தெரிவித்ததுடன் பிரேதங்களை ஏற்றுவதற்காக சபையில் உள்ள வாகனத்தினை திருத்தி பயன்படுத்துமாறு கௌரவ உறுப்பினர் பகீரதன் அவர்களைப்போன்று பலதடவை தான்னால் சுட்டிக்காட்டப்பட்டதாகவும் தனது வேண்டு கோளாக அவ் வாகனத்தினை திருத்தி பிரேதங்கள் ஏற்றுவதற்கு பயன்படுத்துமாறு கேட்டுக் கொண்டதுடன் கடந்த காலத்தில் தனக்கு சபையில் இடம் பெற்ற விடயங்களை கௌரவ உறுப்பினர்களுக்கு தெளிவு படுத்தியதுடன் எதிர்காலத்தில் அமையப்பெறும் சபையில் அனைவரும் ஒன்றுனைந்து வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவேண்டும் என கேட்டுக் கொண்டு தனது உரையினை நிறைவுசெய்தார்.

**அதற்கு பதிலளித்த கௌரவ தவிசாளர் அவர்கள்** கௌளவ உப தவிசாளர் அவர்களுடைய பங்களிப்பும் இச் சபைக்கு முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாக இருப்பதாகவும் கௌரவ உபதவிசாளரிடம் சபைக்கு வந்து தங்களுக்கென ஒதுக்கப்பட்டட அலுவலக அறையில் இருந்து தங்களுடைய கடமையினை

மேற்கொள்ளுமாறு பணித்ததாகவும் எனக்கு தெரிகின்ற அனைத்து விடயங்களும் கௌரவ உப தவிசாளருக்கும் தெரிய வேண்டும் எனவும் தனது கருத்தினை பதிவுசெய்தார்.

**அதனைத் தொடர்ந்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர்** திரு.கிருஷ்ணபிள்ளை சேயோன் அவர்கள் செம்மணோடை வட்டார கௌரவ உறுப்பினர் ஜனாப். ஆதம்லெப்பை அப்துல் கபூர் அவர்களுக்கு தனது வட்டாரத்தில் 5 கோடிருபாய் பெறுமதியான வேலைத்திட்டங்களை செய்தமைக்காக வாழ்த்துக்களைத் தெரிவிப்பதாகவும் .

அதே போன்று சபைநிதி கையாண்ட விதம் தொடர்பாக ஏற்பட்ட அதீர்ப்தி காரணமாக பல சங்கடங்கள் ஏற்பட்டதாகவும் தெரிவித்ததுடன் மக்களுடைய சொத்துக்களை பிழையாக பயன்படுத்துவதனை மன்னிக்க முடியாது எனவும் புதிய தவிசாளர் பதவி ஏற்ற பிற்பாடு எரிபொருளுக்கான செலவு குறைக்கப்பட்டிருப்பதாகவும் அதற்கு வாழ்த்துக்களை தெரிவிப்பதாகவும் அதே போன்று தவிசாளரின் வாகனப்பயன்பாடு குறைவடைந்ததனால் தேய்மானங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்ததுடன்,

இவ்வாறான முன்னேற்றகரமான செயற்பாடுகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் பொழுது தற்பொழுது புதிதாகப் பொறுப்பேற்ற தவிசாளர் அவர்களுக்கு நிதியினை கையாள்வதற்கான நிலை இல்லாமல் இருப்பது ஒரு துர்பாக்கிய சம்பவமாகும் எனவும் கடந்தவாரம் ஒழுங்குசெய்யப்பட்ட விசேட கூட்டத்தில் மக்கள் நலன்சார்ந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டிருந்தும் அதனை செயற்படுத்த முடியாமல் போனது வேதனையான விடயம் எனவும் இது தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளர் அவர்கள் எழுத்து மூலம் அறிவித்திருந்தால் அதனை பரீசீலனை செய்திருக்கலாம் எனவும் அதற்குபின்னால் அரசியல் செயற்பாடுகள் இருப்பதாகவும் இதனால் பாதிக்கப்படப்போவது மக்கள் எனவும்,

இச்சபையில் ஆரம்பத்தில் அனைத்து உறுப்பினர்களும் சேர்ந்து ஏற்றுக்கொண்ட விடயம் திகிலிவெட்டை குடும்பிமலை என்பன பின்தங்கிய வட்டாரம் எனவும் ஆனால் அவ் வட்டாரத்திற்கு கடந்த காலங்களில் எந்தவிதமான அடிப்படை வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கவில்லை எனவும்

கிறவல்களை கௌரவ தவிசாளர் பெற்றுத்தர முன்வந்தும் அதனை செயற்படுத்த முடியாத பிற்போக்கான சபையாக எமது சபை இருந்ததாகவும் மக்களுடைய அடிப்படை வசதிகளை பூர்த்தி செய்வதற்காக சபையினுடைய மாண்பினை பயன்படுத்தவேண்டும் எனவும் கடந்தகால மனக்கசப்புக்களை எல்லாம் மறந்து இனி செயற்பட வேண்டும் எனவும்

திகிலிவெட்டை சந்திவெளி படகுப்பாதை சேதமடைந்து காணப்படுவதனால் புதிய பாதையொன்றினை அவ் மக்களின் போக்குவரத்துக்காக கொள்ளவனவு செய்து தரவேண்டும் எனவும் தற்பொழுது 1.30 மணித்தியாலயத்திற்கு ஒருமுறை நடைபெறும் படகுப் பயணத்தினை 1.00 மணித்தியாலயமாக மாற்றவேண்டுமென தாழ்மையான வேண்டுகோளினை முன்வைப்பதாக தனது கருத்தினை பதிவு செய்தார் .

**அதற்கு பதிலளித்த கௌரவ தவிசாளர் அவர்கள்** இவ் விடயம் தொடர்பாக கௌரவ உறுப்பினர் திரு க.பகீரதன் அவர்கள் தொலைபேசியில் பயணப்போக்குவரத்து நேரத்தினை 45 நிமிடத்திற்கு ஒருமுறை செல்வதற்கு மாற்றம் செய்யுமாறு தன்னிடம் கூறியதாகவும் மண்ணெண்ணை தட்டுபாடு காணப்பட்டதாகவும் வேறொரு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அவ் எரிபொருளினைப் பெற்றுக் கொடுத்ததாகவும் தெரிவித்தார்.

**அதனைத் தொடர்ந்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர்** திரு. குணராசா குணசேகரன் அவர்கள் பாதையின் நேரவிடயம் தொடர்பாக தீர்மானம் ஒன்றினை எடுக்கவேண்டும் என தனது கருத்தினை பதிவுசெய்தார் .

**அதனைத் தொடர்ந்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர** ஜனாப். காமீது லெவ்வை இப்றாஹீம் அவர்கள் கடந்தகாலத்தில் சர்வதிகாரப்போக்குடன் சபை வழிநடத்தப்பட்டிருந்ததாகவும் புதிய தவிசாளர் சில நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றபோது அதை தடைசெய்யும் அதிகாரம் உள்ளூராட்சி ஆணையாளருக்கு உதவி ஆணையாளருக்கோ இல்லை எனவும் பிரதேச சபை கட்டளைச்சட்டத்தின் ஊடாகத்தான் சபை நடந்து கொண்டிருப்பதாகவும் உள்ளூராட்சி ஆணையாளரோ உதவி ஆணையாளரோ உத்தரவிடுவதாக இருந்தால் எழுத்து மூலம் உத்தரவு இடவேண்டும் எனவும் வாய்மூலமாக உத்தரவிட முடியாது எனவும் தெரிவித்ததுடன்

கடந்தககால பாதீடு தொடர்பாகவும் தனது குற்றச்சாட்டினை முன்வைத்தார் ஏனைய சபைகளில் வேலைத்திட்டம் இடம்பெறும்பொழுது வாழைச்சேனை பிரதேச சபைக்குமாத்திரம் ஏன் தடைபோட வேண்டும் என கேள்வி எழுப்பியதுடன், இவ்விடயத்தில் அரசியல் பின் புலம் காணப்படுவதாகவும் தான் பிரதிநிதித்துவப்படுத்தும் வட்டாரம் கடந்த காலத்தில் புறக்கணிக்கப்பட்டிருப்பதாகவும் சபை கலைக்கப்பட்டு ஆட்சி அதிகாரம் செயலாளரிடம் வருப்பொழுது இப்பிரச்சினைகளை கையிலெடுத்து அதற்கான தீர்வினைப் பெற்றுக்கொடுக்கவேண்டும் என கேட்டுக்கொண்டார்

அத்துடன் திண்மக்கழிவு அகற்றும்போது வாழைச்சேனை வீதியினைப்போன்று மாவடிச்சேனை பிரதான வீதியினை கூட்டி திண்மக்கழிவுகளை சுத்தம் செய்யவேணடும் எனவும் முன்பள்ளி ஆசிரியர்கள் தங்களது கடமை முடிந்த பிற்பாடு பொது நூலகங்களில் கடமை புரிவதாகவும் இண்டு இடங்களில் கடமைபுரியும்போது போக்குவரத்து செலவீனங்கள் அதிகம் ஏற்படுவதாகவும் இவ்விடயத்தினை கருத்தில் கொண்டு முன்பள்ளி முடிந்தவுடன் வீடு செல்லவேண்டும் என்ற தீர்மானம் எடுக்கவேண்டும் எனவும் கேட்டுக் கொண்டதுடன், மாவடிச்னை வட்டாரத்தில் பிரதான இடங்களுக்கு மின் விளக்கு பொருத்த வேண்டும் என கேட்டுக் கொண்டு தனது உரையினை நிறைவு செய்தார்

**அதனைத் தொடரந்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர் திரு. சுந்தரம் சுதர்சன் அவர்கள்** எனது வட்டாரத்திற்கு உட்பட்ட முறக்கொட்டாஞ்சேனை துறை பிரதானமாக மக்கள் பயன்படுத்தும் துறை எனவும் கடந்த 05 வருடங்களா மக்கள் போக்குவரத்திற்காக ஒரு படகினை பெற்றுக்கொடுக்க முயற்சிகள் தன்னால் மேற்கொள்ளப்பட்டதாகவும் , அது கைகூடவில்லை எனவும் தற்போது அத்துறையினை கடப்பதற்கு சாதாரண தோணி மட்டும்தான் பயன்படுத்தப்படுகின்றது எனவும்

தற்பொழுது மீனவர் சங்கத்தின்கோரிக்கைக்கு அமைவாக அதற்கான தீர்வினை பெற்றுக்கொடுப்பதற்காக புதிய தவிசாளரினால் முயற்சிகள் இடம்பெற்றதாகவும் இருந்தபோதும் தற்பொழுதுள்ள சூழ்நிலையில் அது நிறைவேற்றமுடியாமல் இருப்பதாகவும் எனினும் தவிசாளரது முயற்சிக்கு பாராட்டுக்களைத் தெரிவிப்தாகவும் கூறியதுடன்

இனிவரும் காலங்களில் அவ் துறையிலிருந்து மக்கள் பாதுகாப்பாக கடப்பதற்கு ஒரு படகும் அதற்குரிய இயந்திரத்தினை பெற்றுத்தருவதற்கு அனைவரும் ஆவன செய்யுமாறு தயவுடன் கேட்டுக் கொள்வதாகவும் தெரிவித்ததுடன் கடந்த காலத்தில் சபையினால் தனக்காக கடந்த 5 வருடத்தில் வழங்கப்பட்ட 750000.00 தொடக்கம் 80,0000.00 ரூபாய் நிதியிலிருந்து தனது வட்டாரத்தில் செய்யப்பட்ட வேலைத்திட்டங்களை கௌரவ உறுப்பினர்களுக்குத் தெளிவு படுத்தியதுடன், கௌரவ உறுப்பினர் திரு. சாமித்தம்பி மணிசேகர் அவர்களும் 14ஆம் வட்டாரத்திற்கு 50,00000.00 ரூபாய் சபை நிதியினை பயன்படுத்தி வேலைத்திட்டங்களை செய்துள்ளதாகவும் LDSP வேலைதிட்டம் ஊடாக தனது வட்டாரத்தில் செய்யப்படும் வேலைகள் மற்றும் பொருத்தப்பட்ட LED மின்குமிழ் தொடர்பான விபரங்களையும் தெளிவுபடுத்தியிருந்தார் .

**அதனைத் தொடரந்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர் திருமதி. பொன்னையா கலைவாணி அவர்கள்** கடந்த காலங்களில் தனது வட்டாரத்திற்கு எவ்வித அபிவிருத்தியும் நடைபெறவில்லை என தனது ஆதங்கத்தினை தெரிவித்தார் .

**கடந்தமாத கூட்டக்**குறிப்பினை **உறுதிப்படுத்தல்** அதனைத் தொடர்ந்து கடந்தமாதக் கூட்டக்குறிப்பினை திரு.குணராசா குணசேகரன் அவர்கள் முன்மொழிந்ததுடன், அதனை கௌரவ உறுப்பினர் திருமதி. பஞ்சாட்சரம் லெட்சுமி அவர்கள் வழிமொழிந்ததனைத் தொடர்ந்து கடந்த மாதக் கூட்டக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு வாக்கெடுப்பிற்கு விடப்பட்டதுடன் கடந்த மாதக் கூட்டக்குறிப்பிற்கு ஆதரவாக கௌரவ தவிசாளர் மற்றும் உபதவிசாளர் உட்பட கடந்த மாதக் கூட்டக்குறிப்பு வாக்கெடுப்பிற்கு விடப்படும் பொழுது சபையில் பிரசன்னமாகியிருந்த அனைத்து கௌரவ உறுப்பினர்களும் வாக்களித்ததனால் கடந்தமாதக் கூட்டக்குறிப்பு சபையால் அங்கீகரிக்கப்ட்டு நிறைவேற்றப்பட்டது.

**கணக்கறிக்கை சமர்ப்பித்தல்**

அதனைத் தொடர்ந்து கௌரவ தவிசாளர் அவர்களால் கடந்தமாதத்திற்கான கணக்கறிக்கை கௌரவ உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது

## தீர்மானங்களை நிறைவேற்றல்

### 01. திர்மானஇல:-தீர்மான இலக்கம் KPPS/M.MEETING/60/FEBRUARY/01/2023

- செம்மண்ஓடை வாராந்த சந்தை விடயம் தொடர்பாக ஆராய்ந்து தீர்மானம் நிறைவேற்றுதல்.

**மேற்படி தீர்மானம் தொடர்பாக விளக்கமளித்த கௌரவ தவிசாளர் அவர்கள்** இது தொடர்பாக உள்ளுராட்சி ஆணையளரிடம் கூறியபொழுது ஏற்கனவே இது நடமுறையில் இருப்பதனாலும் மக்களுடைய நன்மை கருதி செயற்படுவதனாலும் இதனை நிறுத்தமுடியாது என பதிலளித்துள்ளதாக தெரியப்படுத்தினார். அத்துடன் தீர்மனம் தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் தீர்கப்பட்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டிதுடன் , ஆகவே இத் தீர்மானத்தினை இரத்துச் செய்வதாகவும் குறிப்பிட்டார்

### 02. திர்மானஇல:-தீர்மான இலக்கம் KPPS/M.MEETING/60/FEBRUARY/02/2023

- கணனிப் பாட நெறியினை பூர்த்தி செய்த மாணவர்களுக்கான (06 மாதகாலம்) மாதாந்த பயிற்சிக் கொடுப்பனவினை வழங்குவதற்கான சபை அங்கீகாரம் பெறல்.

**மேற்படித் தீர்மானத்தினை கௌரவ உறுப்பினர்** திரு. திரு.கிருஷ்ணபிள்ளை சேயோன் அவர்கள் முன்மொழிந்ததுடன், அதனை கௌரவ உறுப்பினர் திரு. குணராசா குணசேகரன் அவர்கள் வழிமொழிந்ததனைத் தொடர்ந்து தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு வாக்கெடுப்பிற்கு விடப்பட்டதோடு தீர்மானத்திற்கு ஆதரவாக தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடப்படும் பொழுது சபையில் பிரசன்னமாகியிருந்த கௌரவ தவிசாளர் மற்றும் கௌரவ உப தவிசாளர் உட்பட கௌரவ உறுப்பினர்கள் அனைவரும் வாக்களித்ததனால் **KPPS/M.MEETING/60/FEBRUARY/02/2023இலக்க** தீர்மானமானது ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

## 03.தீர்மானஇல:-தீர்மான இலக்கம் KPPS/M.MEETING/60/FEBRUARY/03/2023

சந்தி வெளி திகிலிவெட்டை மக்கள் போக்குவரத்துக்காக பயன்படுத்தும் படகுச் சேவையின் பயண நேரத்தினை மாற்றம் செய்வதற்கான சபை அங்கீகாரம் பெறல் .(1.30 மணி நேர இடைவெளியினை 1.00 மணி நேர இடைவெளி நேரமாகக் குறைப்பதற்கு)

**மேற்படித் தீர்மானத்தினை கௌரவ உறுப்பினர்** திரு. திரு.கிருஷ்ணபிள்ளை சேயோன் அவர்கள் முன்மொழிந்ததுடன், அதனை கௌரவ உறுப்பினர் திரு. குணராசா குணசேகரன் அவர்கள் வழிமொழிந்ததனைத் தொடர்ந்து தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு வாக்கெடுப்பிற்கு விடப்பட்டதோடு தீர்மானத்திற்கு ஆதரவாக தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடப்படும் பொழுது சபையில் பிரசன்னமாகியிருந்த கௌரவ தவிசாளர் மற்றும் கௌரவ உப தவிசாளர் உட்பட கௌரவ உறுப்பினர்கள் அனைவரும் வாக்களித்ததனால் **KPPS/M.MEETING/60/FEBRUARY/03/2023இலக்க** தீர்மானமானது ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

**இறுதியாக கௌரவ தவிசாளர் அவர்களின் நன்றியுரையுடன் 60ஆவது சபை அமர்வானது காலை 11.40 மணியளவில் இனிதே நிறைவுசெய்யப்பட்டது.**

……….................…………………

திரு. கனகரெட்ணம் கமலநேசன்
தவிசாளர்
கோறளைப்பற்று பிரதேச சபை,
வாழைச்சேனை.